(v) 'மாலே மணி' நாளிதழில் ஒருறுப்பினர் பேரவையைக் கூட்டவேண்டுமென்று கோரியதுபற்றி விமர்சித்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 'மாலே மணி' என்ற பத்திரிகையைப்பற்றி, திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். அதில் "சென்ற மாதம் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது ஏற்பட்ட பதட்ட நிலைபற்றி விவாதிக்கச் சட்டப்பேரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதுபற்றி என்னைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, அவ்விதம் கோரப்போவதாகத் தெரிவித்தேன். சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் என் கடமையை நான் செய்யும் போது, சென்னையிலிருந்து வெளியாகும் 'மாலே மணி' என்னும் நாளிதழ் 31—12—1967 தேதிய வெளியீட்டில் நான் அவ்வாறு கோரியதைக் கேவலமாக விமர்சித்தும், என்னைப் பயமுறுத்தியும் விமர்சித்திருக்கிறார்கள். அந்த இதழையும் இத்துடன் அனுப்பி யிருக்கிறேன். குறிப்பிட்ட அக்கட்டுரை சட்டசபை அங்கத்தினரின் உரிமையை மீறியதாகுமென நான் கருதுகிறேன்." என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, 'மாலே மணி' நாளிதழ் ஆசிரியர், வெளியிடுபவர் ஆகியோர்மீது உரிமை மீறல் பிரச்சினை இருப்பதாகச் சொல்கிறார்.

நான் அந்தப் பத்திரிகையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் படிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், அதைப் பேரவையில் படிப்பது நன்றாக இருக்காது என்பதினால் நான் வாசிப்பதற்கில்லை. அந்த ஆசிரியருக்கு எழுதி, ஓரளவுக்கு விளக்கம் கேட்டு, என்ன நிலைமையில் அம்மாதிரிப் பிரசுரிக்கப் பட்டது என்று கேட்க இருக்கிறேன். கேட்ட பிறகு, இதை மீண்டும் நாம் எடுத்துக்கொள்ளலாம்.

(vi) அவிநாசி வட்ட திராவிட பொரி-கடலே உற்பத்தியாளர் முன்னேற்ற சங்கம் வெளியிட்ட துண்டுப் பிரசுரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக, அவிநாசி வட்ட திராவிட, பொரி-கடலே உற்பத்தியாளர் முன்னேற்றச் சங்கம் என்பவர்கள் மணிவாசகர் அச்சகம், அவிநாசி என்ற அச்சகத்தில் அச்சிட்டு ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் துண்டுப் பிரசுரத்தின் வாசகம் பேரவையின் உரிமையை மீறியிருப்பதாக திரு. செ. பாலசுப்பிர மணியன் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பேரவையின் உரிமைகளை மீறியிருப்பதாக இருக்கிறது என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. ஆனால் இம்மாதிரி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர்மீது இந்தப் பேரவை தனது